இருக்கின்றபோது, புதியத் திட்டங்களை 5 கோடி, 6 கோடி அளவிலே செலவழிப்பதற்கு அரசிடம் நிதிநிலை, வாய்ப்புத் தரவில்லை. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்று சொன்னேன். எதாவது சிறப்பு அடிப்படையிலே நிதிகள் வருமானால், அது சம்ந்தமாக அரசு பரிசிலிக்கும், அது சம்பந்தமாக ஆய்வு செய்யப்படும். ஆனால், தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசுக்கு நிதிக் கஷ்டம் இருப்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, உலக வங்கியிடமிருந்து நிதிகளைப் பெற்று இந்தச் சாலையை அமைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்தால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், இந்தச் சாலையை அமைத்துக் கொடுத்தால், அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள மக்கள் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைவருக்கும் அது பயனுள்ள வகையிலே அமையும். எந்த நிதி நெருக்கடி இருந்தாலும்கூட ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவி கிடைத்தால் அதன் மூலமாக, இந்தச் சாலையை, வருகிறகாலத்தில் செய்து தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல், இந்த மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டத்திலேதான் இதை எடுத்துச் செய்ய முடியும். அதற்குத்தான் நிதியாதாரங்கள் மிகக் குறைவாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறேன். சிறப்பு நிதித் திட்டத்தின் கீழே ஏதாவது ஒதுக்கீடுகள் வருமானால், அது சம்பந்தமாக இந்த அரசு பரிசீலிக்கும், இது சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அரசு அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கான மதிப்பீடுகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். நிதி வருகின்றபோது, ஏதாவது ஒரு திட்டத்திலே சேர்ந்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 347, திரு. எம்.ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

347—

கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் ஒதுக்கீடு செய்தல்

***10353**—திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 22]

(அ) 1987 ஆம் ஆண்டிலேயே கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்தோர் சான்றுகள் தந்திருந்தும், புதிதாகச் சான்றுகளும், ஆதாரங்களும் தரவில்லை என்றால் ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் என்று எம்.எம்.டி.ஏ. நோட்டீஸ் அனுப்பியுள்ளது பற்றி ஒதுக்கீடுதாரர்கள் முறையிட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்தவர்கள் சான்றிதழ் தந்திருந்தும் போதுமான சான்றிதழ்களும் ஆதாரங்களும் தரவில்லை என்றால் ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் என்று எம்.எம்.டி.ஏ. நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை. எனவே அது குறித்து ஒதுக்கீடுதாரர்கள் முறையிட வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) எனவே இந்த வினா எழ வாய்ப்பில்லை.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் சரியான சான்றிதழ்களையும், ஆதாரங்களையும் தந்திருக்கிறார்களா? அவ்வாறு தராதவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் கடைகள் கோரி மனுச் செய்திருந்தவர்களில் பலர் உரிய சான்றிதழ்களைத் தரவில்லை. எனவே அவர்களிடத்திலே போதுமான தகவல் தரவேண்டுமென்று ஒரு முறைக்கு இரண்டு முறை தெரிவிக்கப்பட்டு, அதன்பிறகு சான்றிதழ் பெறப்பட்டு அதிலே தகுதியானவர்களுக்கு எல்லாம் கடை ஒதுக்கீடு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.